
# மாயூர ஸ்தல புராணம்

சுருக்கமும்

உற்சவ பாடல்களும்



**S. ராஜகோபாலய்யர்**

நியூஸ் ஏஜண்ட்,

**மாயவரம்.**

விலை அணு] 1953 [0—2—0

# மாயூர ஸ்தல வரலாற்றுச் சுருக்கம்.

பொன்கொழிக்கும் சோழவள நாட்டின் மடியில் தவழ்ந்து செல்லுகிறாள் காவிரி பசும் பொன் வயல்களையும், விரிபூஞ் சோலைகளையும் வளப்படுத்தி வளைந்து வளைந்து ஒடுகின்றாள் எழில் குன்றா காவிரி. குழந்தைக்குப் பாலூட்டி வளர்க்கும் தாய்போல பயிர்களுக்கு நீரூட்டி வளர்க்கும் அன்னை காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளது. திருமயிலை என்னும் மாயூரம். பண்பிலும் பக்தியிலும் அறிவின் செறிவிலும் வரலாற்றின் தொன்மையிலும் சிறப்புற்று விளங்கும் இவ்வூரின் சிறப்பை பல நூல்களில் பரக்கக் காணலாம்.

இவ்வூர் மயிலை எனவும் திருமயிலாடுதுறை என்றும் அழைக்கப்படுகின்றது. ஸ்கந்தம் முதலிய மஹா புராணங்களிலும் சிவரஹஸ்யத்திலும் சிதம்பர புராணம் முதலிய ஸ்தலபுராணங்களிலும் இத்தலம் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

பிரும்மதேவரே எழுந்தருளி மயிலாடுதுறையின் கோமகனும் இறைவனை வழிபட்டனராம். ஆகவே இறைவன் பிரம்மலிங்கம் எனவும் பெயர்

பெற்று விளங்குகின்றார் தட்சன் பெற்ற திரு மகளாம் இறைவி, மயில்வடிவெய்தி அழகுற ஆடி வந்து உயிர்கட்கு உயிராய் நின்று உயர் நிற்கும் இறைவனின் அருட்கைகளால் அணைத்துக் கொள் ளப்பட்டாள் என்று கூறப்படுகின்றது மனிதருக்கு மட்டுமல்லாமல் மற்ற உயிர் இனங்களுக்கும் உய் வளித்து ஞானிகள் விழையும் விழைவாம் பேரின்ப பெருவாழ்வளிக்கும் இறைவனின் அருட் பண்பி னால் "கௌரீமாயூரநாதர்" என்று பெயர்பெற்றார்.

அச்சமுற்று ஆடிவந்த அழகு மயிலுக்கு அபய மளித்த ஆண்டவனின் அருட்பண்பு, துன்பத்தில் துடிதுடிக்கும் மக்களுக்குக் கைகொடுக்கும் அருட் பண்பை உலகிற்குக் காட்டுகின்றது, துன்பங்களைக் கடந்தால்தான் இன்பப் பொய்கையில் நீராடலாம் என்ற கருத்து இங்கு புலனாகின்றது மயிலாக வந்த தட்சன் மகள் அபயப்பிரதாம்பிகை, அபயாம் பிகை, அஞ்சல்நாயகி, அஞ்சலை என்ற பெயர் களால் அழைக்கப்பட்டாள்.

இத்தலத்தில் 86- புண்யதீர்த்தங்கள் உள்ளன வருடந்தோறும் ஐப்பசி மாதத்தில் ஒவ்வொரு நாளும் ஸ்ரீ மாயூரநாதர் ஸ்ரீ அபயாம்பிகையுடன் காவிரிக்கு எழுந்தருளி விருஷப தீர்த்தத்தில் எழுமை யெழுபிறப்பும் நீங்க, முக்தி வழிதேடி நிற்கும் பக்தர்களுக்கு தீர்த்தம் கொடுத்தருளும் காட்சி இறைவன் கண்படைத்த கருமத்தின் பயனை பெறுவதற்கோர் வாய்ப்பளிக்கும் வகையில் உள்ளது.

ஸ்ரீ மாயூரநாதர் பவனி வரும் நேரங்களில் வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்துகொண்டு மழை பொழியும் காட்சி சேற்றுக்காற் செல்வராம் ஸ்ரீ மாயூரநாதரின் அமர சக்தியின் வேகத்தை எடுத்துக்காட்டும். பக்தி மழை பொழிந்து ஞானப் பயிர் முளைத்து அன்பும் அறமும் தழைத்தோங்க ஆண்டவனின் கருணை மேகம் நம்மை சூழ்ந்துக் கொண்டு நம்மை புனிதப்படுத்தும் பெரு வாய்ப்பை நாம் இம் மாயூரத்திலே பெறுகின்றோம். ஐப்பசி மாதப்பெரு விழாவாம் இக்கோலாகலத் திருவிழா விலே

திரள் திரளாகத் திரண்டுவரும் மக்கட் கூட்டம் ஸ்ரீ மாயூரநாதரை வழிபட்டு பக்தியில் பழுத்து விளங்குவது நாத்திகத்திற்கு ஓர் சவாலாகும் அதுமட்டு மல்லாமல் மக்கள் பலவகையான கேளிக்கைகளையும் கலைக் கோயில்களையும் கண்டு களிக்கின்றார்கள். இசையும் கூத்தும் சிறப்புற்று மிளிரும் இந்நாட்களில் அறிவு அரும்பி கலையாக மலர்ந்து பக்திமணம் வீசி ஞான ஒளி பரப்பும் பெரும் சாதனையை இங்கு காணலாம். இவ்வாறாக கலையும் கடவுளும் இயைந்து இயங்கும் அழகு காட்சி வேறெங்கும் காணமுடியாத பெருங் காட்சியாகும்.

ஐப்பசிமாத அமாவாசையில் பகல் பதினைந்து நாழிகை வேளையில் விருஷப தீர்த்தத்தில் கங்கை வந்து நீராடுகிறாள் என்று கூறப்படுகின்றது குடகு

மலையில் தவமிருந்த கலசமுனியின் கமண்டலத்தை கவிழ்த்தான் விநாயகன் கமண்டலத்திலிருந்த கங்கை நீர் பெருகி வாய்க்காலாகி ஓடையாகி நதியாகி பெரும் நீர்பிரவாகமாகி வயல்களுக்கு நீரூட்டும் எழில்குன்று காவிரி யென்று பெயர் பெற்ற வறலாற்றை நாம் அறிவோம். குறுமுனி கொணர்ந்த கங்கை நீரின் பெருக்கமே சோணாட்டில் உடலை வளைத்து கல கலவென சிரித்து வயல்கள் தோப்புகள் பூஞ்சோலைகளிடையே அழகுற நடமாடிச்செல்லும் மங்கை "காவிரி" எனறு கூறுவர் அக் காவிரியில் ஐப்பசிமாத அமாவாசை தினத்தன்று கங்கை வந்து நீராடுவதால் கங்கையில் நீராடிய பலனைப் பெறலாம் என்று கூறப்படுகின்றது.

திருவிளநகரில் ஞானசம்பந்தருக்கு அன்னை காவிரி வழி விட்டனளாம். பெருஞ்சேரியில் ஸ்ரீ பிரஹஸ்பதி பகவான் அருள் பெற்று நல்வாக்கைப் பெற்றனராம். மூவலூரில் வழிகாட்டும் வள்ளல் எனவும் இறைவனுக்கு பெயர் உண்டு. காவிரிக்கு வடக்கேயுள்ள உத்திர மாயூரத்தில் ஸ்ரீ மாயூரநாதர் ஆசானாக எழுந்தருளி மோன முத்திரை காட்டி சிவஞானத்தை உபதேசித்து அருள் செய்தார். மற்றும் இத்தலத்தை யொட்டிய சிவஸ்தலங்களும் உள்ளன.

அவற்றுள் அபிராமி பூசித்த கருணம்பேட்டை, கௌமாரி பூசித்த ஆனந்த தாண்டவபுரம், வைஷ்

ணவி பூசித்த பசுபதீசுவரம் வராகி பூசித்த கழுக் காணிமட்டம். இந்திராணி பூசித்த தருமபுரம், சாமுண்டி பூசித்த வள்ளலார் கோயில் முதலியன சிறப்பாகும்.

மயில் வடிவு நீங்கி இயற்கையான எழிலுரு வுற்ற அம்பிகையின் விருப்பப்படி நடனமாடி கலைத்தெய்வமாக விளங்கினர். ஸ்ரீ மாயூரநாதர் தேவர்களின் வேண்டுகோளின்படி, எழில் படைத்த தட்சன் மகளாம், ஈஸ்வரியை திருமணம் செய்து கொண்டார் இவ்வாறாக மயிலாடுதுறையின் மணாள ராய் நின்ற இறைவன் மக்கள் தம் கடமைகளை செயல்மூலம் உணர்த்தினர். வருடம் தோறும் துலா மாத உற்சவத்தில் ஏழாவது திருநாளில் இறை வியை இறைவன் ஆட்கொண்டு இருந்தோம்பி அறன் இழுக்கா இல்வாழ்க்கையின் சிறப்பை மக்களுக்கு எடுத்துக்காட்டு மூகத்தான் நிற்கும் காட்சியைக் காணலாம். கலைகண்ட பெருமகனும் இறைவன் ஆடிய தாண்டவம் கௌரீதாண்டவம் என பெயர் பெற்றது. நாட்டிய அரங்கிலே மாயூரத்தின் வரலாற்றிலும் அங்கு கோயில் கொண்ட இறைவனும், மாயூர நாதனின் செயல் களிலும் பலவித உண்மைகள் பொதிந்து கிடக் கின்றன.

மயிலாகி வந்த மங்கைக்கு அருள்செய்து ஆட் கொண்ட இறைவன் மக்களுக்கு அன்பின் தேவை

யை உணர்த்துகின்றான் ,, அன்போடு இயைந்த வழக்கென்ப,, ஆருயிர்க்கு என்போடியைந்த தொடர்பு ,, என்றவள்ளுவனின் அன்புக்குரல் இங்கு ஒலிக்கின்றது

யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற அறநியதிப்படி கற்ற கல்வியை பலருக்கு போதித்து ஞான ஒளிபரப்பும் பணியே, மக்கட் பணியாகும் என்ற கொள்கைபடி ஆண்டவன் ஆசானாகவந்து உத்திரமாயூரத்தில் சிவஞானத்தை உபதேசித்து அருள்செய்த செய்கை. எழுத்தறி வித்தவன் இறைவனாவன் என்பதை நினைவூட்டும் செய்கையாகும்

இறைவன் தாண்டவமாடிய செய்கை கலையும் கடவுளும் இயந்தவை என்ற பொருள்காட்டும் செய்கையாகும்

,ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்கை நோற்பாரின் நோன்மையுடைத்து, எனறதுதமிழ் மறைமக்கள் தம் இன்ப வாழ்வு, மனைவியோடு கூடி வாழ்ந்து இன்புற்று நேர்வழி தவறாத அறநெறி வாழ்வில் சென்று கடமையாற்றுவதின் அடிப் படையில் தான் உள்ளது என்பதை எடுத்துக் காட்டுவான் வேண்டி ஸ்ரீ மாயூரநாதர் உலகப் பெருந்தாயாம் ஸ்ரீ அபயாம்பிகையை திருமணம் செய்து கொண்டு தலைவனும் தலைவியும் போல் எணக்காட்டியில் தோன்றுகின்றார்

இமயத்தில் தோன்றி எழில் நடையிட்டு வரும் கங்கையின் பிரிவாற்ருமையால் ஸ்ரீ காசி விசுவ நாதர் தம் பரிவாரங்களுடன் எழுந்தருளி. ஸ்ரீ மாயூர நாதரின் அருள் நோக்குப் பெற்ற பேரூராம் மாயூரத்தில் விருஷபதீர்த்தத்தின் தென்கரையில் கோயில் கொண்டு தன் அருள் நோக்கில் மக்கள் தம் உள்ளத்தை மகிழ்வித்து வருகின்ருர் கங்கைக் கரையில் ஞானவழிகாண அறிவு ஒளி காட்டிய கடவுள் இன்று காவிரிக்கரையில் கருணை மழை பொழிந்து விளங்கும் காட்சி பக்தியில் திளைத்த மக்கள் போற்றும் பெருங்காட்சி ஆகும்

முக்திவழி தேடி உடல்நோக உள்ளம்சோர பலசிவஸ்தலங்களை நாடி இன்பத்திலும் துன்பத்திலும் இயைந்து விளங்கும் இறைவனை வழிபட்ட நாதசன்மா அனவித்தை என்ற தம்பதிகள் திருவையாற்றை அடைந்து வழிபட்டனர்
ஸ்ரீ ஐய்யாரப்பர் அங்குதோன்றி காவிரியின் வளமைபெற்ற அறம்கண்ட பெருநகராம் மாயூரத்தைஅடைந்து அங்கு கோயில்கொண்ட கடவுள் ஸ்ரீ மாயூரநாதனை வழிபட்டு முக்தி பெறுக என்று கட்டளையிட ஐய்யாரப்பர் ஆணைப்படி மாயூரம்வந்து தவம் செய்தனர்.

அன்பின் வழிவந்த இறைவன் அவர்களுக்கு அருள்செய்து உம்மைதரிசித்த பின்பே எம்மை தரிசித்த பயனை அனைவரும் அடைவர் என்று திருவாய்மலர்ந்தருள அவர்கள் லிங்கவடிவுற்றனர்

அவற்றுள் அநவித்தை ஐக்யமான லிங்கத்திற்கு இன்னும் பெண் உடை அணியப்படுகின்றது ஸ்ரீ மாயூரநாதரையும் ஸ்ரீ அவயாம்பிகையையும் வழிபட்டவர்கள் ஸ்ரீ சண்டிகேசுவர சண்டிகேசுவரிகளை வழிபட்டபின்பு இவ்விரு மூர்த்திகளையும் வணங்கும் நியதி இன்றும் உள்ளது

இவ்வாருக பல இடங்களில் அலைந்து திரிந்து உலகஒளியைத் தேடிய நாதசன்மா அநவித்தை தம்பதிகள் அன்பின் சிறைபட்ட இறைவனை இம் மாயூரத்தில் கண்டனர் கடவுளைக் காணவேண்டி அறநூல்களைக் கற்றெழுகி பூசைகள் பல புரிந்து வழிபாடு செய்வதோடு இறைவன் உள்ளத்து அன்பில் சிறைபட்டவன் என்ற உண்மையை உணரவேண்டும். மயிலாக வந்த ஸ்ரீ அபயாம் பிகையின் அன்புக் கயற்றில் கட்டுண்டவனின் பண்புஎன்றும் மறக்க முடியாத பண்பாகும் இப் பண்பு உலகம் துய்த்துணரவேண்டிய பண்பாகும்.

இதுதான் நாதசன்மா அனவித்தை வறலாற்றில் பொதிந்துகிடக்கும் உண்மையாகும் அவர்கள் இறைவன் பற்றிய உண்மையைதேடி ஊர் ஊராய் சென்ருர்கள் கோயில்களை சுற்றித்தொழுதார்கள் ஆனல் மாயூரத்திலே ஒரு மயிலுக்கு அருள் செய்து ஆட்கொண்ட அருட்கடவுளை அன்பின் வலையிலே கண்டுகொண்டனர்,

நாதசன்மா அநவித்தைகளுடன் ஸ்ரீ ஐயாரப்பர் இத்தலத்திற்குவந்து மாயூரநாதர் கோயிலின் மேலரதவீதியில் கோயில் கொண்டுள்ளார்.

மாயூரத்தின் இறைவனும் ஸ்ரீ மாயூரநாதனின் வரலாறு காவிய உலகினுக்கோர் இலக்கியமாகும் மனிதஉள்ளத்தில் துளிர்கின்ற அன்பும் காதலும் இறைவடிவுற்று இன்பகூத்தாடிய வரலாற்று இலக்கியமாகும் மக்கள் தம் கடமையை உணர்த்த அருள் வடிவுற்று வந்த ஆண்டவன் அளித்த அறத்தின் உறையுள் ஆகும் அத்தகைய இல்க்கியம் வாழ்க

முற்றிற்று.

# மாயூர க்ஷேத்திர உத்ஸவ பாடல்கள்.

1 மகிமையுள்ள மாயூரநகரை
மகிழ்ந்து தமிழ்ப்பாட—எந்தன்
மாய்கை மயங்கியோட—வெகு
பாபம் பறந்து ஓட
மங்களமாகவே பொங்கும் காவேரியில்
இறங்கி தீர்த்தமாட,

2 கங்கை யமுனை சரஸ்வதியும்
மூவர்களுங் கூட—மஹா
ரிஷிகளும் வந்துசேர—வெகு
தபவிகள் நீராட
அந்தணர்கள் கூடியருண
உதயஸ்நானமாட

3 முப்பத்து முக்கோடி தேவர்களும்
கூடியவாள் சேர—திவ்ய
விமானந்தனிலே ஏறி—அந்தர
ஆகாசவெயில் வாரார்
நாலு வேதவாக்கியஞ் சொல்லி
ரிஷப தீர்த்தமாட.

4 காசிதேசம் மலையாளம்
சீமையரெல்லாம் கூட—அவாள்
சாலையில் வந்து சேர—மிகுந்த
சவாரிகளும் சேர
எதிருமெதிருமாக வர

ஏகமாய்ச் சனம் சேர.

5 இருபுறமும் சாலைதன்னில்
வண்டிகள் வந்து நெருங்க—வெகு
ஜனங்களும் அங்கு நெருங்க—அவாள்
கண்கள் விழி பிதுங்க
எதிருமெதிருமாக நெறுங்க
எதிர்த்த ஜனங்கள் நொருங்க,

6 உதயஸ்நானம் போகுதென்று
ஓடியவாள் கூடி—சிவ
மாயூரந்தனைத்தேடி—அப
யம்பிகையை நாடி
செல்வமுள்ள காவேரியில்
இறங்கிதீர்த்தமாடி.

7 ஐப்பசி மாதந்தனில்
தேதி முதலாக—அவாள்
அனைவரும் வந்துகூடி—மகா
வீதிதன்னிலே நெருங்கி
நிற்கத்தரிக்க இடமில்லாதே
விடுதி தன்னில் இறங்கி.

8 தென்கரையில் மாயூர
நாதர் வந்து இறங்க—விச்வ
நாதரும வந்து எதிர—வெள்ளை
நாதரும் எதிராக
பஞ்சமூர்த்தி கூடியொன்றாய்
மண்டபத்தினில் நிறைய.

9 மண்டபத்தின் வர்ணனைகள்
வாக்கினில் அடங்காது— அது
நாக்கில் இடங்கொள்ளாது—அதை
எழுதவு முடியாது
சிங்கார நேர்மைகளைச்
சொல்லியும் முடியாது.

10 மண்டபத்தின் நேர்தனிலே
நெருங்கக் கால்கள் நாட்டி—அதில்
உயர்ந்த சங்கிலி பூட்டி—அதற்குத்
தகுந்த ஊஞ்சலும் மாட்டி
சித்திரம் அமைத்த பட்டுச்சேலை
சுற்றி எங்கும் கட்டி,

11 வகை வகையாய்த் தாருடனே
வாழைகள் தனை நிறுத்தி—எங்கும்
வரிசைத் தோரணங்கட்டி—அதற்கு
உயர்ந்த கொடிகள் மாட்டி
பக்திசிரத்தையுடனே கூடிய
பிரபுக்களவாள் சுற்றி

12 வகை வகையாய் இளநீரும்
வரிசைப் பலாக்காயும்—நல்ல
வெளுத்த பூஷணிக்காயும்—அதற்
கிசைந்த பறங்கிக்காயும்
திதிப்புடனே கூடினதொரு
திவ்ய பனஸக்காயும்

13 குடங்குடமாய் கட்டினதொரு

குளிர்ந்த சுரைக்காயும்—அதற்
கிசைந்த வெள்ளரிக்காயும்—நல்ல
தருந்த கக்கரிக்காயும்
காரைக்காயும் கோவைக்காயும்
சாம்புப் பீர்க்கங்காயும்

14 பத்தி பத்தியாய்க் கட்டினதொரு
பச்சைப் புளியங்காயும்—நல்ல
கொத்துச் சுண்டைக்காயும்—அதில்
ஒத்தை வெண்டைக்காயும்
கருணை கோம்பு மஞ்சள் இஞ்சி
கோத்துக்கட்டின அழகும்

15 காம்படனே கட்டினதொரு
கத்தரிக்காயும்—பெரிய
முத்தின வழைக்காயும்—நல்ல
பச்சைப் பாகற்காயும்
அரைக்கீரை மூளைக்கீரை
கிழக்கீரையின் தண்டும்

16 பாம்பு பாம்பாய் வளர்ந்ததொரு
பச்சைப் புடலங்காயும்—நல்ல
கொத்து மூக்குத்திக்காயும்—அதில்
ஒத்தை முருங்கக்காயும்
பயறு துவரை அவரையுடனே
கொத்தவரங்காயும்

17 மங்காயும் தேங்காயும்
மணக்கும் நார்த்தங்காயும்— நல்ல
புளிப்பெலுமிச்சங்காயும்—மணத்த
கசப்பு நார்த்தங்காயும்
பச்சை மிளகாய் கொத்தமல்லி
கொத்து மணத்தங்களியும்

18 வகை வகையாய்த் தாருடனே
வரிசை வாழைப்பழமும்—நல்ல

வெடித்த பலாப்பழமும்—நிரம்ப
மணக்கும் மாதுளம் பழமும்
கொளஞ்சி நார்த்தை சரம சரமாய்
எலுமிச்சம் பழமும்

19 கலகலென்று குலை குலையாய்
சிவந்த பாக்குப் பழமும்—அதற்
கிசைந்த ஈச்சம்பழமும் - நல்ல
தகுந்த கொரட்டாப் பழமும்
குலை குலையாய் கட்டிய தொரு
கொடி முந்திரிப்பழமும்

20 முத்துச் சோளம் பவளச்சோளம்
வெள்ளைச் சோளக்கொண்டை—நல்ல
கேழ்வரகுக்கொண்டை—அதைச்
சுற்றிக்கட்டி அதண்டை
கம்பங்கதிர் செம்பங்கதிர்
கட்டியிருக்கும் அழகும்

21 மண்டபத்தின் வர்ணனைகளைச்
சொல்லித் தொலையாது—அதை
எழுதவும் முடியாது—அது
ஏட்டிலும் அடங்காது
சிங்கார நேர்மைதனைச்
சொல்லியும் முடியாது.

22 மண்டபத்தைச் சுற்றிலும் (அங்கே)
வகை வகையாய்க் கடைகள்—அதில்
விதம்விதமாய் வளைகள்—அதை
வளைய விற்கின்ற பெண்கள்
கஸ்தூரி குங்குமங்கள்
குமுகுமென்று வாசனைகள்

23 இருபுறமும் வீதிதனில்
கடைகள் வந்து நெருங்க—வெகு
வியாபாரம் நிறைய—மகா

ஜனங்கள் பிரிந்து கலைய
கச்சேரி வாசல் தனில்
கள்ளர் வந்து நிறைய.

24 ஐப்பசி மாதந்தன்னில்
அமாவாஸைத்திதியும்—அங்கு
வந்திருக்கின்ற ஜனமும்—அந்த
வெய்யலுடைய சூடும்
இருபுறத்திலும் சன்னதிதனில்
தேவவாத்தியத்தினழகும்

25 தாளமேளந் தாவியுடனே
தட்டுச்சுற்றும் அழகு—அங்கு
யானை வரும் அசைவும்—வெண்
சாமரைகளின் அசைவும்
திமிதிமென்று காவேரிக்கரையில்
வாத்தியகோஷத்தழகும்

26 மகிமையுள்ள மாயூர
நாதருடன் கூட—விச்வ
நாதரும் வந்தெதிராக—வெள்ள
நாதருமெதிராக
சந்நதி வீதி சுற்றிவந்து
சப்பரந்தனிலேற

27 கிழக்கு மேற்காய்க் காவேரிக்கரையில்
ஜனங்களும் வந்து நெருங்க—வெகு
சிங்காரமாக விளங்க—நல்ல
தேவவாத்தியம் முழங்க
திருவழுந்தூர் துரைதனிலே
ரங்க நாதரும் வந்து இரங்க

28 தாளம் மேளம் தாவிகளும்
அப்ஸரஸ்திரீகள் போலும்—வெகு
வேதப் பிராமணர்களும்—அவாள்
ருத்திர ஜபங்கள் ஓத

சுவாமி தீர்த்தம் கொடுத்தவுடன்
ஜனங்கள் தீர்த்தமாட.

29 ரிஷப தீர்த்தக் கரைதனிலே
தீர்த்தமவான் ஆட—வெகு
சிங்காரங்கள் விளங்க—நல்ல
தேவ வாத்தியம் முழங்க
அபயாம்பிகையாளுடனே
சுவாமி அங்கே விளங்க.

30 தாள மேளந் தாவியுடனே
தளதளவென்று விளங்கும்—நல்ல
தங்கவில்வ தளமும்—அதைக்
கண்ட கண்கள் குளிரும்
பக்தியுடனே தரிசிப்போர்க்கு
பாக்கியந் தானும் வளரும்.

31 ரிஷப வாகனந்தனிலே
நேர்த்தியுடன் ஏறி—சுவாமி
வீதிதனில் வாரார்—விச்வ
நாதருமுடன் சேர
அழகாக வீதி சுற்றி
ஆலயந்தனைச் சேர.

32 கடமுகமுங் கழிந்த பின்பு
முடவனுக்கு மோக்ஷம்—வெகு
ஜனங்களுக்கு ஓட்டம்—அந்தச்
சாலைதனில் கூட்டம்
முன்னும் பின்னும் மழையுமப்போ
பொழிவதொரு பாட்டம்.

33 பெருமையுள்ள மாயூர நாதர்மேல்
பொன்னு தமிழ் பாட—அது
பூமி எங்கிலும் பரவ—வெகு
பெண்களு மதைப்பாட
அபயாம்பிகையாள் கிருபைகூடி
ஐக்கியந்தனை நாடுவோம்

---

லிபர்ட்டி பிரஸ், மாயூரம்.

# விளம்பரம்.

எங்களிடம் குமுதம், கல்கண்டு, பேசும் படம், குண்டூசி, வானொளி முதலிய தினுசுகளும் கிரந்தம், தமிழ் & தேவநாக ரலிபியில் வைதீக புஸ்தகங்களும், வைத்தியம், அம்மானை, புராணம், சதகம் முதலிய புஸ்தகங்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

புது வருஷத்திய காலண்டர்கள், பஞ்சாங்கங்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**S. ராஜகோபாலய்யர்,**

நியூஸ் ஏஜண்ட்,

மாயவரம்.


ஸ்ரீ லக்ஷ்மி பிரஸ், சென்னை-1.